கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk
e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

| எனது இல / මගේ අංකය / My No. | NP/3/7/Circulars-15 | உமது இல / ඔබේ අංකය / Your No. | | திகதி / දිනය / Date | 05-11-2015 |
|---|---|---|---|---|---|

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,
வடக்கு மாகாணம்.

## பாடசாலைகளில் நிதி, நிர்வாக விடயங்களில் சட்டங்களையும் விதிகளையும் பின்பற்றுதல்

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் 2015/04 இலக்க, 19.05.2015ஆம் திகதியிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கு அமைவாக, சில நடைமுறைகளை அமுல்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆனால் அச்சுற்றுநிருபத்தினை பெரும்பாலான பாடசாலை அதிபர்கள் இன்னும் நடைமுடைமுறைப்படுத்தாமலுள்ளனர். எனவே, பின்வரும் விடயங்களைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தும்படி தாங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

1. தரம் 1 மற்றும் தரம் 6 இல் மாணவர் தொகை வகுப்பிற்கு 30இற்கு மேல் வைத்திருக்க முடியாது. இதற்கமைய, தரம் 1 மற்றும் தரம் 6 வகுப்புக்களில் புதிய மாணவர்களைச் சேர்ப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

2. தரம் 1, 6 மற்றும் 12 வகுப்புக்கள் உள்ளிட்ட எல்லா வகுப்புக்களினதும் மாணவர் அனுமதிக்காக பணம் அறவிடுவது முற்றாக நிறுத்தப்படல்வேண்டும். அவ்வாறு பணம் அறவிடும் பாடசாலை அதிபருக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.
   இது விடயமாக மாகாணப் பொதுக் கணக்காய்வுக் குழுவும் அறிவுறுத்தல் தந்துள்ளது.

3. பாடசாலைகளில் வைர விழா, நூற்றாண்டு விழா மற்றும் வெள்ளி விழா போன்ற விழாக்கள் உட்பட எந்த விழாவுக்களுக்கும் புத்தக வெளியீட்டின்போது மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுவது தடை செய்யப்படுகின்றது. இவ்வாறு பணம் அறவிடப்படுவதற்கு எவ்விதமான நடைமுறைகளும் பின்பற்றப் படுவதில்லை என்பது எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. பணம் வழங்குபவர்களுக்குப் பற்றுச்சீட்டு எதுவும் வழங்கப்படுவதில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

4. ஆகவே, இனிவருங் காலத்தில் இவ்வகையான விழாக்களை நடாத்துதல் மற்றும் நூல் வெளியீடு செய்தல் போன்ற நிகழ்வுகளுக்கு அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளருடாக மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரது அனுமதி பெறப்பட்ட பின்பே, அந்நிகழ்வுகள் நடாத்தப்படல் வேண்டும்.

5. பாடசாலைகளில் மணிவிழா கொண்டாடுவதற்கும், மணிவிழா மலர் வெளியிடுவதற்கும் பணம் பெறப்படுவதனை அவதானிக்க முடிவதால், மணிவிழா கொண்டாடுவதும் மணிவிழா மலர் வெளியிடுவதும் இதன் மூலம் முற்றாக நிறுத்தப்படுகின்றது.

6. மேலும், பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது மாணவர்களை தமது பிரத்தியேக வகுப்புக்களுக்கு வருமாறு வற்புறுத்துவது பல மாணவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு வற்புறுத்துவதும் பெருங்குற்றமாகும். இவ்வாறான நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

இ.இரவீந்திரன்,
செயலாளர்.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

பிரதி:

1. மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.
2. வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வடக்கு மாகாணம். - சகல பாடசாலை அதிபர்களுக்கும் வழங்குவதற்கு,
3. கோட்டக் கல்வி அலுவலர்கள், வடக்கு மாகாணம். - நடைமுறைப்படுத்தி அறிக்கையிடுவதற்கு,

\USERS\USER\DESKTOP\MATTERS OF FINANCE & ADMINISTRATION IN THE SCHOOLS..DOCX

செயலாளர் / ලේකම් / Secretary: 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office: 021-3202704 (Admn.), 021-3202568 (Dev.), 021-3202281 (Plan.), 021-3202309 (Acct.), 021-7390665 (DSW)
தொலைநகலி / ෆැක්ස් / Fax: 021-2220794